1995 நவம்பர் 10] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

கடத்தூர் காவல் நிலையம் அருகிலுள்ள பஸ் நிலையம் அருகில் செல்லும்போது துரைசாமி உடல் நலமின்றி வாந்தி எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. பயத்தின் காரணமாக தான் ஏற்கெனவே விஷம் அருந்தி விட்டதாக, அருகில் இருந்தவர்களிடம் துரைசாமி கூறியதாகவும் சொல்லப்படுகிறது. கடத்தூர் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. குமாரசாமி என்பவர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, துரைசாமியையும் அவருடன் வந்திருந்த வெங்கடாசலம் மற்றும் பழனிசாமி ஆகியோரையும் கோபிச்செட்டிபாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு சுமார் 10–50 மணியளவில் துரைசாமி இறந்து விட்டதாக மருத்துவர்கள் அறிவித்ததாகவும் தெரிகிறது.

இந்தச் சம்பவம் குறித்து திரு. பி.கே. பழனிசாமி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில். கடத்தூர் காவல் நிலைய குற்ற எண் 401/95–ல், குற்றவியல் நடைமுறை சட்டம், பிரிவு 174–ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, முதல் தகவல் அறிக்கை கோபிசெட்டிப்பாளையம் கோட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. கோபிச்செட்டிப்பாளையம் கோட்ட ஆட்சித் தலைவர் துரைசாமியின் உடலைப் பார்வையிட்டு பிரேத விசாரணை நடத்தியுள்ளார். மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனையும் நடத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 11–35

இந்தச் சம்பவத்தில் இறந்து போன துரைசாமி என்பவர் ஏற்கெனவே 4 திருட்டுக் குற்றங்களில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிய வருகிறது. பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த சம்பவம் தொடர்பாக, கோபிசெட்டிப்பாளையம் கோட்ட ஆட்சித் தலைவரை விசாரணை மேற்கொண்டு, அறிக்கை அனுப்பும்படி கேட்டுக் கொண்டுள்ளார். அவரது அறிக்கை கிடைக்கப் பெற்ற பின், அதன் மீது எங்கள் அரசு தக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இங்கே இந்தப் பிரச்சினைக்குச் சம்பந்தம் இல்லாத சில கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் பேசியதால் அவற்றிற்கு நானும் பதில் தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும் நபர்களின் உயிருக்கு காவல்துறை பொறுப்பேற்க வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லை. உண்மைதான். ஆனால் இது மாநிலத்திலுள்ள

காவல் துறைக்கு மட்டும் பொருந்தும் என்று உறுப்பினர் ஞானசேகரன் கருதுகிறாரா? அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். நாங்கள் ஆட்சி அமைத்த பின்னால் முக்கியமான வழக்கில் தேடப்பட்ட கோடியக்கரை சண்முகத்தை எங்கள் மாநில காவல் துறைதான் பிடித்து சி.பி.ஐ.-யிடம் ஒப்படைத்தது, (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அவர் சி.பி.ஐ. பாதுகாப்பில், கஸ்டடியில் இருந்தபோது ஒரு மரத்திலிருந்து தொங்க விடப்பட்டு அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்பட்டது. ஆகவே, விசாரணைக்கு ஒருவரைப் பிடித்துச் செல்கின்றபோது அவருடைய உயிருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் சி.பி.ஐ.-க்கு மட்டும் இல்லையா என்பதை உறுப்பினர் ஞானசேகரன் போன்றவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

(ஆ) நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை. தமிழகத்தில் அண்மையில் பெய்த பெருமழை, புயல் மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று திரு. ஜி. பழனிசாமி, திரு. க. குப்பன், திரு. சி. ஞானசேகரன், திரு. கு. தங்கமுத்து, திரு. கு. சீனிவாசன், திரு. எஸ்.எம். கிருஷ்ணன், திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. கோடிமாரி ஆகியோர் அறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். இது பொதுவாக தமிழ்நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள பாதிப்பு என்கிற வகையில் ஓர் உறுப்பினர் இது பற்றிய பிரச்சினையை எழுப்பினால் முழுத் தகவலையும் அமைச்சர் அவர்கள் தருவதற்கு வாய்ப்பிருக்கும். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலத்தில், வடமேற்கு பருவமழை தொடங்கிய காரணத்தால் குறிப்பாக எங்களுடைய மாவட்டமாக இருக்கிற நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஒரு வார காலமாக பெருமழை பெய்ததனுடைய விளைவாக அந்த மாவட்டத்தில் இருக்கிற பல்வேறு தாலுக்காக்களில் அனேகமாக வெள்ளத்தினாலே விவசாயப் பயிர்கள் முழுவதுமாக முழுகடிக்கப்பட்டு இருக்கின்றன. தஞ்சை, நாகை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும்-நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மட்டும் பதிலளிக்க இருந்தாலும் கூட, மூன்று துறை

1995 நவம்பர் 10] [திரு. ஜி. பழனிசாமி]

சம்பந்தப்பட்ட பிரச்சினையாக, ஒன்று பொதுப்பணித் துறை அமைச்சர், இரண்டு வேளாண்மைத் துறை அமைச்சர், மூன்று வருவாய்த் துறை அமைச்சர் இந்தப் பிரச்சினையிலே-பேரவைத் தலைவர் அவர்களே, அவை கொஞ்சம் அமைதியாக இருந்தால் நன்றாக இருக்கும். ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருக்கிறது, ஒரே சத்தமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும். ஒவ்வொருவருடைய தொகுதியையும் பாதித்து இருக்கும். எல்லோருக்கும் பொதுவாகப் பேசச் சொன்னேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் மட்டும் அல்ல. பொதுப்பணித் துறை அமைச்சர், வேளாண்மைத் துறை அமைச்சர் ஆகிய மூன்று அமைச்சர்களுக்கும் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் குறுவை அறுவடைக்குத் தயாராக இருந்த சுமார் 50 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த நெல் முழுவதும் தண்ணீரில் முழுகி அழுகிப் போய் இருக்கின்றது.

முற்பகல் 11-40

அதேபோன்று இன்னும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் சம்பா, தாளடி பயிர்கள் எல்லாம் தண்ணீரிலே முற்றிலுமாக மூழ்கியிருக்கின்றன. நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலே, குறிப்பாக, திருத்துறைப்பூண்டி, தலைஞாயிறு, திருவாரூர், மன்னார்குடி, கோட்டூர், முத்துப்பேட்டை ஆகிய பகுதிகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. உப்புத் தண்ணீர் அங்குள்ள நிலங்களில் புகுந்து முற்றிலுமாகப் பயிர்கள் அழிந்து போயிருக்கின்றன. நாகை காயிதே மில்லத் மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் அதிகாரிகளை அழைத்துக் கொண்டுபோய், அந்தப் பகுதியிலே தண்ணீர் வடியாததையும், பயிர்கள் நீரிலே மூழ்கிப் போயிருப்பதையும், அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்கதிர்கள் எல்லாம் அழிந்து இருப்பதையும் நேரிலே பார்த்திருக்கிறார். அதற்கு அடிப்படையான காரணம், எந்த ஆண்டு இதுபோன்று மழை பெய்தாலும்-ஒரு மாதம் முழுவதும் மழை பெய்தாலும் உடனடியாக நீர் வடிந்துவிடும். ஆனால், தற்போது இன்றுவரையிலும் அந்தப் பகுதியிலே மழைத் தண்ணீர் வடியவில்லை. அதனால் மாமுல் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏழை மக்களுடைய மண் குடிசைகள் எல்லாம் நீரிலே மூழ்கியிருக்கின்றன; மண் சுவர் எல்லாம் இடிந்து

பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன. அதற்கு அடிப்படையான காரணம், அங்கே இருக்கக்கூடிய, ஆறுகளில் சீமைக்காட்டாமணி காடுகள் போல மண்டிக் கிடக்கின்ற காரணத்தால், தண்ணீர் உடனடியாக கடலுக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, குறிப்பாக, கடலோரங்களில் தண்ணீர் வடியக்கூடிய இடங்களில் இன்றைக்கு இறால் பண்ணைகள் அனுமதி பெற்றும், அனுமதி பெறாமலும் செயல்படுகின்றன. தண்ணீர் வடியாமல் இருப்பதற்குக் காரணம், அந்த ஆற்றுக் கரையை விட இறால் பண்ணை பண்டின் கரை உயர்ந்து இருப்பதால் தண்ணீர் வடிய முடியாத மிகப் பெரிய தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு உடனடியாக, ஏதாவது நிவாரணம் வழங்க வேண்டும். உரங்களை வழங்க வேண்டும். அழிந்தது போக மிச்சம் இருக்கிற பயிரையாவது அவர்கள் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுடைய வரியை வஜா செய்வதற்கு வருவாய்த்துறை அதற்கான உத்தரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, இறால் பண்ணை பண்டை நேரிடையாகப் பார்ப்பதோடு மட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர், வேளாண்மைத் துறை அமைச்சர் ஆகியோர் மாநிலத்தில் ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து, தொடர்ந்து ஆண்டுதோறும் இப்படி பாதிப்பு வராமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஆவன செய்ய வேண்டும். இன்றைக்கு எனக்குக் கிடைத்த தகவல், மாவட்ட ஆட்சித் தலைவர் இவைகளையெல்லாம் பார்வையிட்ட பின்னால் அங்கு இருக்கக்கூடிய வேளாண்மைத் துறை, பொதுப் பணித் துறை அதிகாரிகளோடு கலந்துபேசி, அதற்காக ஒரு திட்டம் தீட்டி, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக அந்தத் துறைகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆக, மாநில மட்டத்திலே இருக்கிற அதிகாரிகளைக் கொண்டு, ஒரு குழுவை அமைத்து, அதைப் பார்வையிட்டு, அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று மூன்று அமைச்சர்களுடைய கவனத்தையும் ஈர்த்து, அமைகிறேன்.

1995 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றிப் பல்வேறு உறுப்பினர்களும் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக, கடற்கரைப் பகுதி முழுவதும், எஞ்சிய உள்பகுதிகள் பலவற்றிலும் பாதிப்பு இருக்கும். எனவே, கொடுத்திருக்கிற உறுப்பினர்களுடைய உணர்வுகள் அந்த அந்த மாவட்டத்தைப் பொறுத்து எந்த அளவுக்கு இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள். அதற்கேற்ப அவர்கள் திருப்திப்படுகிற வகையில் பதில் வழங்குவார் என்று எதிர்பார்க்கிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும் மற்ற உறுப்பினர்களும், அண்மைக் காலத்தில் பெய்த மழையினால் பொது மக்களும், குடிசைவாழ் மக்களும், அதைப்போல பயிர்களும் சேதம் அடைந்ததைப் பற்றித் தெரிவித்தார்கள். இன்றைக்கு எவ்வளவு மழை பெய்தாலும், புயல் அடித்தாலும் இவைகளில் எல்லாம் இருந்து பொது மக்களையும், அதே நேரத்தில் பயிர்களையும் மற்றவைகளையும் காப்பாற்றுவதற்காக இந்த அரசு பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதனால்தான் இவ்வளவு மழை பெய்தும், சேதம் அதிகம் இல்லை என்பதை நினைத்துப் பார்க்கிறபோது, அதற்குக் காரணம் இந்த அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தான் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றைச் சொல்ல வேண்டும். அவசர காலங்களில், மற்றவர்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்வதற்காக மாவட்டத் தலைமையிடங்களில் Very High Frequency (VHF) கருவி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைக்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் யாரிடம் வேண்டுமானாலும் தொடர்பு கொள்ள முடிகிறது.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னபடி, கடற்கரை மாவட்டங்களான, சென்னை, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு-வள்ளலார், தஞ்சை, நாகை-காயிதே மில்லத் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு Ham Radio என்ற வசதி இன்றைக்கு இந்த அரசு ஆட்சிக்கு வந்தபிறகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் உங்களுக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எஸ்.டி. சோமசுந்தரம்] [*1995 நவம்பர் 10 முற்பகல் 11–45*

அது மட்டுமல்ல இப்படி மழை பெய்யும், வெள்ளம் வரும் என்பதற்காக வருவாய்த் துறை அதிகாரிகளும் மற்றவர்களும் முன்கூட்டியே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதையும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக முன்கூட்டியே அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதையும், நான் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் இப்படி வருகின்ற இயற்கை இடர்ப்பாடுகளைத் தடுப்பதற்காக, வருவாய்த் துறையைச் சார்ந்த முதன்மை ஆணையாளர் திரு. ஜி. ரங்காராவ் அவர்கள் *7-7-1995* மற்றும் *12-9-95* அன்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் என்னென்ன செய்யவேண்டும் என்பதை அறிவுறுத்தி முன்கூட்டியே நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கனமழை மற்றும் புயல் ஏற்படுகின்றபோது வருகின்ற இன்னல்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக தலைமைச் செயலகம், முதன்மை ஆணையாளர், வருவாய் நிர்வாக ஆணையாளர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஆகியோர் அலுவலகங்களில் வெள்ளக் கட்டுப்பாட்டு அறைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த வெள்ளக் கட்டுப்பாட்டு அறைகளில் *24* மணி நேரமும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே *24* மணி நேரமும் வெள்ளக் கட்டுப்பாட்டு அறை இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகின்றபொழுது காயிதே மில்லத் மாவட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு மழை எப்படி பெய்திருக்கிறது என்று சொல்லுகின்றபோது, சென்ற ஆண்டு *11-10-94*, *8-11-94* அதேபோல *8-11-95* என்கிற காலகட்டத்தில் எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு மழை பெய்துள்ளது என்று சொன்னால், எல்லா மாவட்டங்களையும் நீங்கள் பார்க்கின்றபோது, எவ்வளவு மழை பெய்ய வேண்டுமோ அதைவிடக் குறைவாகத்தான் பெய்திருக்கிறது. எனவே, தமிழ் நாட்டிலே எல்லா இடங்களிலும் இன்னும் அதிகமான அளவு மழை பெய்ய வேண்டுமென்று நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டு மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். காயிதே மில்லத் மாவட்டத்தில்

1995 நவம்பர் 10] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

சென்ற ஆண்டும் புயல் வெள்ளம் வந்தது. சென்ற ஆண்டு காயிதே மில்லத் மாவட்டத்தில் பெய்த மழையின் அளவு 417 மில்லி மீட்டர். அதாவது, சென்ற ஆண்டு இந்நாள் வரை பெய்த மழையின் அளவு 417 மில்லி மீட்டர். ஆனால் இந்த ஆண்டு இந்நாள் வரை பெய்த மழையின் அளவு 480 மில்லி மீட்டர். அதாவது, 63 மில்லி மீட்டர் அதிகமாகப் பெய்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, சென்னை மாநகரத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றால், இங்கே நல்ல மழை பெய்திருக்கிறது. மழை பெய்துள்ள எல்லா இடங்களையும் நான் போய் பார்த்தேன். சம்பந்தப்பட்ட மற்ற அமைச்சர்களும் சென்று பார்த்தார்கள். தாழ்வான பகுதிகளிலே பம்பு செட்டுகளை வைத்து தண்ணீரை வெளியேற்றுவதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் குறுவைப் பயிர் சேதம் 741 ஏக்கர். தாளடி நாற்று முழுவதும் சேதம் 497 ஏக்கர். பகுதி சேதம் 144 ஏக்கர். சம்பா பயிர் சேதம் 20 ஆயிரம் ஏக்கர். பகுதியாக சேதம் ஆனது 37 ஆயிரம் ஏக்கர். தஞ்சாவூர் மாவட்டத்தில் 3200 ஏக்கர் நீரால் பாதிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலே பாதிக்கப்பட்ட கிராமங்கள் 27.

முற்பகல் 11-50

அதேபோல, நாகப்பட்டினத்தில் மட்டும் 470 கிலோமீட்டர் அளவுக்கு ரோடு பாதிக்கப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் 170 கிலோமீட்டர் பாதிக்கப்பட்டிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் அதிகமாக ரோடு பாதிக்கப்படவில்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் 10 கிலோமீட்டர் பாதிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற அமைச்சர்களுக்கும் சேர்த்துதான், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். சம்பந்தப்பட்ட அமைச்சரிடம்போய் உறுப்பினர் திரு. கே.பி. ராஜு தொந்தரவு செய்கிறார். உறுப்பினர் அவருடைய இடத்திற்குச் செல்ல வேண்டும். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னபடி, நாகை–காயிதேமில்லத் மாவட்டத்திலே மட்டும்தான் சென்ற ஆண்டு எவ்வளவு மழை பெய்ததோ, அதைவிட அதிகமாகப் பெய்திருக்கிறது. மற்ற மாவட்டங்களில் எல்லாம் இன்னும் அதிகமாக மழை பெய்ய வேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களில் எங்கேயும் பயிர்ச் சேதம் இல்லை. மற்ற மாவட்டங்களில் எங்கேயும் ரோடு பாதிக்கப்படவில்லை. மற்ற மாவட்டங்களில் எங்கேயும் வாய்க்கால்கள் பாதிக்கப்படவில்லை, இன்றுவரை என்னிடத்திலே இருக்கிற கணக்குப்படி. தமிழ்நாட்டிலே எந்த மாவட்டத்திலும் பயிர்கள் பாதிக்கப்படவில்லை. எந்த மாவட்டத்திலும் குளங்கள் பாதிக்கப்படவில்லை. எந்த மாவட்டத்திலும் வாய்க்கால்கள் பாதிக்கப்படவில்லை. நாகப்பட்டினம் மாவட்டத்திலே மட்டும்தான் 540 வாய்க்கால்கள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கால்நடை பாதிப்பும் தமிழ்நாடு பூராவும் எங்கேயும் இல்லை, செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் 2 கால்நடைகள் இறந்திருக்கின்றன. அனைத்து மாவட்டங்களிலும், எல்லா இடங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், வருவாய்த்துறை அதிகாரிகளும், மற்றவர்களும் போர்க்கால நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தயார் நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மழையால் பாதிக்கப்பட்ட ரோடுகள் சரிசெய்யப்பட்டு, பஸ், லாரி, கார், ஸ்கூட்டர், சைக்கிள், மாட்டு வண்டிகள் ஆகியவையெல்லாம் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதிகமான பாதிப்பு இல்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருக்கும் கிளாரிபிகேஷன் தேவைப்படலாம். உங்கள் ஒருவருக்கு மட்டும் கொடுத்தால், இங்கே 10, 12 உறுப்பினர்களும் அவ்வாறு கேட்கிறார்கள். (குறுக்கீடு) உங்களுடைய மாவட்டத்தில் பாதிப்பு ஏதுமில்லை. உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.